சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 31.12.2019

சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, விகாரி வருடம் மார்கழி மாதம் 15–ம் நாள் (டிசம்பர் திங்கள் 31–ம் நாள்:– 31.12.2019) செவ்வாய் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

## பொருள் எண்.01

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான பழைய நகராட்சி அலுவலக கட்டிட வணிக வளாகத்தின் வடக்கு பக்கம் உள்ள கட்டண கழிப்பறைக்கு அருகில் உள்ள காலியிடத்தில் மாத வாடகை அடிப்படையில் தரைக்கடை அமைத்து நடத்துவதற்கு நகர்மன்றத் தீர்மான எண்.382, நாள்.31.05.2018ன்படி, திரு.க.கந்தகுமார், த/பெ.பி.கணபதி என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டது. மேற்படி, இடத்தினை உரிமதாரருக்கு ஒப்படைக்கும் பொழுது சின்னமனூர் சார்பு காவல் ஆய்வாளர் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் மேற்படி இடத்தை ஒப்படைக்க இயலவில்லை. எனவே, மேற்படி இடத்தை ஒப்படைக்கக்கோரி திரு.க.கந்தகுமார், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.20754/2019ல் வழக்கு தொடரப்பட்டு வழக்கு 05.11.2019ல் முடிவு பெற்று உள்ளது. அதன்படி, குத்தகைதாரர் திரு.க.கந்தகுமார் வேறு இடம் ஏதும் தேவையில்லை எனக் கூறி அன்னாரது செலுத்திய டெபாசிட் தொகையை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். எனவே, வழங்கிய குத்தகை உரிமத்தை ரத்து செய்து டெபாசிட் தொகை ரூ.75000/—ஐ திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:— மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6550/2015/அ2)

**தீர்மான எண், நாள்** **768 , நாள்.31.12.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.02

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான சங்கிலியார் திடலில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 31.03.2020 வரை மூன்றாண்டு குத்தகை காலம் முடிவடைகிறது. எனவே, 01.04.2020 முதல் 31.03.2023 வரை மூன்றாண்டு காலங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு டெபாசிட் தொகை ரூ.200000/— (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) என நிர்ணயம் செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:— 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி ஏல நடவடிக்கைக்கான உத்தேச செலவினம் ரூ.50000/—க்கு அனுமதிக்கலாம். (ந.க.எண்.5431/2017/அ2)

**தீர்மான எண், நாள்** **769 , நாள்.31.12.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.03**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் ஆக்கிரமிப்பு செய்து தினசரி விற்பனை செய்யும் கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் நகர்மன்றத் தீர்மான எண்.334, நாள்.28.03.2018ன்படியும், 01.04.2018 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டு காலங்களுக்கு திரு.S.M.சுகுமாறன் த/பெ.முனியாண்டி என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டது. மேலும் திரு.S.M.சுகுமாறன் 24.11.2019 ஆம் தேதி இறந்துவிட்டபடியால் தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் அவரது மனைவி திருமதி.சு.நீலவேணி, மூன்றாம் ஆண்டு குத்தகை உரிமத்தை (2020–2021) 01.04.2020 முதல் 31.03.2021 வரை ரத்து செய்யுமாறு விண்ணப்பம் செய்துள்ளார். எனவே, ஏற்கனவே வழங்கிய குத்தகை உரிமம் உத்திரவை ரத்து செய்து டெபாசிட் தொகை ரூ.100000/– என நிர்ணயம் செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5431/2017/அ2)**

**தீர்மான எண், நாள்** **770, நாள்.31.12.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.04**

இந்நகராட்சிக்குச் சொந்தமான IUDP கடை எண்.20, திரு.R.கருப்பையா என்பவர் பெயரில் உள்ளது. திரு.R.கருப்பையா என்பவர் 08.09.2017ல் மரணமடைந்துவிட்டார். அவரது வாரிசு திரு.R.நாராயணன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தொடர்ந்து கடையினை நடத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2452/2019/அ2)**

**தீர்மான எண், நாள்** **771 , நாள்.31.12.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.05**

இந்நகராட்சியில் மின் பணியாளராக பணிபுரியும் திரு.அ.உசேன் முகமது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு WP(MD) No.23248/2019 தொடர்பாக திரு.V.ஜெயபிரகாஷ் நாராயணன் வழக்கறிஞர் எதிர் வழக்காடவும் அதற்கான கட்டணம் உத்தேசமாக தொகை ரூ.15000/– வழங்கலாம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2773/2009/சி1)**

**தீர்மான எண், நாள்** **772 , நாள்.31.12.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.06

மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 08.05.2018 ஆம் தேதிய ந.க.823/2016/பி1 எண்ணிட்ட செயல்முறை உத்திரவின்படி, கூடலூர் நகராட்சி பொறியாளர் திரு.ஈ.சிவக்குமார், நகராட்சி பொறியாளர் கூடுதல் பொறுப்பாக இந்நகராட்சியின் பொறியாளர் பணியிடத்தில் 01.06.2018 முதல் 13.11.2019 வரை பார்த்து வந்தமைக்கு அரசாணை எண்.122, பணியாளர்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள்.03.10.2011–இன்படி, அன்னாரின் அடிப்படை ஊதியத்தில் 5–இல் 1 பங்கு கணக்கிடப்பட்டு தொகை ரூ.257581/– அன்னார்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4307/2019/சி1)**
**தீர்மான எண், நாள்** **773 , நாள்.31.12.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.07

சின்னமனூர் நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN60Z5198க்கு (மார்ஷல்) புதிய மின் கலப்பெட்டி (Battery) வாங்கி பொருத்தும் பணிக்கு 06.12.2019ம் தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | கோகுல் பவர் சிஸ்டம், கே.கே.குளம், சின்னமனூர் | ரூ.6145/– |
| 2. | கே.ஜி.எண்டர்பிரைசஸ், சின்னமனூர் | ரூ.7000/– |
| 3. | கனகராஜ் ஆட்டோ எலெக்ட்ரிசன், சின்னமனூர் | ரூ.7200/– |

**அலுவலகக் குறிப்பு:–** **1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் காணும் நிறுவனம் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம்.**
**2. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4458/2014/இ2)**
**தீர்மான எண், நாள்** **774 , நாள்.31.12.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.08

இந்நகராட்சியின் சொந்தமான ஈப்பு வாகனம் வண்டி எண்.TN60S2751 இஞ்சின் பழுது நீக்கம் செய்து, சில மராமத்து பணிகள் செய்யும் பணிக்கு 04.12.2019ம் தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | லெட்சுமி இன்ஜினியரிங் லேத் & ஹெட் ரீகண்டிசன், ரீ போரிங் ஒர்க்க்ஸ, கம்பம் | ரூ.70450/– |
| 2. | கோல்டன் மோட்டார்ஸ், (யுவராஜா தியேட்டர் அருகில்) கம்பம் | ரூ.77100/– |

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் காணும் நிறுவனம் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம். (ந.க.எண்.6260/2014/இ2)**
**தீர்மான எண், நாள்** **775 , நாள்.31.12.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.09**

இந்நகராட்சிக்குச் சொந்தமான அலுவலகம், தலைமை நீரேற்று நிலையம் மற்றும் குடிநீர் வடிப்பான் நிலையத்தில் பயன்பாட்டில் உள்ள 40KVA, 125 KVA மற்றும் 140 KVA திறன் கொண்ட ஜெனரேட்டர்களுக்கு ஆயில் சர்வீஸ் செய்யும் பணிக்கு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான மதுரை எலக்ட்ரோ கண்ட்ரோல் நிறுவனத்தின் 23.12.2019ம் தேதிய கீழ்க்கண்ட விலைப்புள்ளியின்படி, சர்வீஸ் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூபாய்.30150/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்வதன் மூலம் ஜெனரேட்டர்களின் ஆயுட்காலம் புதுப்பிக்க வாய்ப்புள்ளதால், மேற்கண்ட நிறுவனம் மூலம் சர்வீஸ் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| Sl.No | KVA | Material Charges | Labour Charges | Total |
|---|---|---|---|---|
| 1. | 40 KVA | ரூ.6387/– | ரூ.1180/– | ரூ.7567/– |
| 2. | 125 KVA | ரூ.7498/– | ரூ.1416/– | ரூ.8914/– |
| 3. | 140 KVA | ரூ.6825/– | ரூ.6844/– | ரூ.13669/– |
| | | | மொத்தம் | ரூ.30150/– |

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்காணும் 40KVA–யை செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலும், 125 KVA மற்றும் 140 KVA செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.6381/2012/இ2)**

**தீர்மான எண், நாள்** **776, நாள்.31.12.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள 40 **KVA** ஜெனரேட்டருக்கு புதிய மின்கலப் பெட்டி (Battery) வாங்கி பொருத்தும் பணிக்கு 04.12.2019ம் தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை ரூ.ப. |
|---|---|---|
| 1 | கோகுல் பவர் சிஸ்டம், கே.கே.குளம், சின்னமனூர் | ரூ.8690/– |
| 2. | கே.ஜி.எண்டர்பிரைசஸ், சின்னமனூர் | ரூ.9100/– |
| 3. | கனகராஜ் ஆட்டோ எலெட்ரிசன், சின்னமனூர் | ரூ.9300/– |

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் காணும் நிறுவனம் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம். (ந.க.எண்.6381/2012/இ2)**

**தீர்மான எண், நாள்** **777 , நாள்.31.12.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2, நகராட்சி காலனி பள்ளியில் கிழக்கு புறத்தில் உள்ள மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பள்ளி கட்டிடம் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சி வகுப்பு கட்டிடம் ஆகியவற்றில் மழைநீர் வடிந்து செல்ல முடியாத நிலை உள்ளதால் மேற்படி கட்டிடத்தில் உள்ள பழுதினை சரி செய்ய ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.55000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4673/2019/இ1).**

**தீர்மான எண், நாள்** **778 , நாள்.31.12.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26, முத்துராமலிங்க தேவர் நகரில் 1 முதல் 5 வரை உள்ள தெருக்களில் கழிவு நீர் கால்வாய் மிகவும் தாழ்வாக உள்ளதால் மாநில நெடுஞ்சாலை மட்டத்திற்கு கழிவு நீர் கால்வாய் உயர்த்தும் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4429/2019/இ1).**

**தீர்மான எண், நாள்** **779, நாள்.31.12.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சங்கிலியார் திடலில் அமைந்துள்ள கல்யாண மண்டபம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பள்ளிக் கட்டிடத்தில் பிரதான கதவுகள், ஜன்னல்கள் பழுதடைந்து வகுப்பறைகள் பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. எனவே மேற்காணும் பள்ளி கட்டிடத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. பள்ளிக் குழந்தைகள் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4786/2019/இ1).**

**தீர்மான எண், நாள்** **780, நாள்.31.12.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான கருங்கட்டாங்குளம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மெயின் வகுப்பறை ஒன்று பழுதடைந்து உள்ளது என முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் 01.11.2019 ஆம் நாளிட்ட ந.க.5523/அ4/2019 எண் கடிதத்தின்படி தெரிவிக்கப்பட்டு, மேற்படி கட்டிடம் மிகவும் பழமையானது என்றும் 1906ஆம் ஆண்டு கட்டப்பட்டு, பழுதடைந்த காரணத்தினால் இடிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது என தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 18.12.2019ஆம் நாளிட்ட ந.க.24206/19/ஊ.வ.7 எண் அவசரக் குறிப்பாணையில், பள்ளிக் கட்டிடங்களை பாதுகாப்பு நிலையினை கருத்திற்கொண்டு உடனடியாக இடித்து அப்புறப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்டிடத்தினை பள்ளியில் பயிலும் குழந்தைகளின் நலன் கருதியும், கட்டிடம் கட்டப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆனதாலும் இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோர்களின் அறிக்கையின்படி, பள்ளியில் பயிலும் குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி கே.கே.குளம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள முக்கிய வகுப்பறையின் (Main Building) இடித்து அப்புறப்படுத்த அனுமதிக்கலாம்.** |
| தீர்மான எண், நாள் | **781 , நாள்.31.12.2019** |
| தீர்மானம் | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குச் சொந்தமான நகர் நல மருத்துவமனையில் மழை காலங்களில் மேற்கூரையில் தண்ணீர் தேங்கி வடிவதால் பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சரி செய்ய ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5.60 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. பொது மக்களின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4833/2019/இ1).** |
| தீர்மான எண், நாள் | **782 , நாள்.31.12.2019** |
| தீர்மானம் | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் எண்.TN60V8239 என்ற டிப்பர் லாரிக்கு 2019–2020ம் ஆண்டிற்கான தகுதிச் சான்று பெரும் பொருட்டு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.120000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட வாகனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை முன் அனுமதி பெற்று வழங்கிய நடைமுறையினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4598/2019/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **783, நாள்.31.12.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.17**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவுப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலமாக துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள **01.08.2016** முதல் **31.07.2019** முடிய அனுமதி பெற்று நடைபெற்று வருகிறது. அனுமதி காலத்திற்கு பின்பு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வது சம்மந்தமாக கடந்த **03.06.2019**ம் அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அதனடிப்படையில் மேற்கண்ட அலுவலகத்தில் இருந்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரி ந.க.2790/2019/அ3, நாள்.03.07.2019ஆம் தேதிய கடிதப்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மூலம் அனுமதி கடிதம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்ட உத்திரவு கிடைக்கும் வரை, இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.0576/2015/எச்1, நாள்.05.08.2019ன்படி, **01.08.2019** முதல் **31.12.2019** வரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி உத்திரவை எதிர்நோக்கி ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது. இந்நிலையில் மீண்டும் **24.12.2019**ம் அன்று **31.12.2019** உடன் நீட்டிப்பு செய்து ஒப்பந்த காலம் முடிவடைய உள்ளது என்ற விவரத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இருப்பினும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களை நேரில் சந்தித்து இது சம்மந்தமான கருத்துக்களை ஆணையர், பொறியாளருடன் சென்று தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் மூன்று மாத காலத்திற்கு ஆணையர் மற்றும் மன்ற அனுமதி பெற்று நீட்டிப்பு செய்யலாம் என வாய்மொழியாக அறிவுறுத்தப்பட்டதன்படியும், தொடர்ந்து ODF++ போன்ற ஆய்வுகள் மேற்கொள்ள உள்ளதாலும், தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகளை தரம்பிரித்தல், மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகளை பாதுகாப்பாக கொண்டு சேர்த்தல் போன்ற காரணங்களுக்காகவும், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தினந்தோறும் பொது மக்களிடமிருந்து வருகின்ற குறைகளை களையவும் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவை எதிர்நோக்கி மூன்று மாத காலத்திற்கு சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்ய மன்றத்தின்

அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண், நாள் 784, நாள்.31.12.2019**

**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.18**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் வண்டி எண்.TN60S**6634**க்கு ஆயில் சர்வீஸ் மற்றும் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.**28800/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவின தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.7057/2014/இ2)**

**தீர்மான எண், நாள் 785, நாள்.31.12.2019**

**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.19**

சின்னமனூர் பேரூராட்சி **01.04.1977** முதல் **3**ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, **1984** முதல் **2**ம் நிலை நகராட்சியாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. நகராட்சிப் பகுதியின் மொத்தப் பரப்பளவு **25.95** சதுர கிலோ மீட்டர் ஆகும். நகராட்சி எல்லைக்குட்பட்ட **1** முதல் **27** வார்டுகளில் அமைக்கப்பட்டுள்ள **1281** தெரு விளக்குகளையும் **(1200** எண்ணம் 1x24 Watts CFL, 80 எண்ணம் 4x24 Watts CFL மற்றும் **1** எண்ணம் உயர்கோபுர மின் விளக்குகள்) மற்றும் **74** எண்ணம் டைமர் தானியங்கி ஸ்விட்சுக்களையும் தனியார் மூலம் பராமரிப்புப் பணி மேற்கொள்ள இந்நகர்மன்றத்தின் **30.03.2017**ம் நாளிட்ட தீர்மான எண்.**85**ன்படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் ந.க.**13899/2016**/டிஒ**1**, நாள்.**16.08.2017**–இல் அனுமதி **3** ஆண்டுகளுக்கு பெறப்பட்டது. அதன்படி ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டு குறைவான விலை விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஆண்டிப்பட்டி M/s சடையாண்டி ஏஜென்ஸிக்கு வேலை உத்திரவு **08.12.2017**–இல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்நகர்மன்றத்தின் **30.11.2018**ம் நாளிட்ட **534** எண் தீர்மானத்தின்படி, மீள மேற்படி நிறுவனத்திற்கு **08.12.2018** முதல் மேலும் ஓராண்டு காலத்திற்கு அல்லது LED விளக்குகளாக மாற்றியமைக்கும் வரை என்ற நிபந்தனையின் பேரில் நீட்டிப்பு அனுமதி வழங்கப்பட்டு கடந்த **07.12.2019** உடன் மேற்படி நீட்டிப்பு அனுமதி காலம் நிறைவடைந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்படி ஆண்டிப்பட்டி M/s சடையாண்டி ஏஜென்ஸ் நிறுவனம் தனது **04.11.2019** ஆம் நாளிட்ட ஒப்புதல் கடிதத்தில் மேற்படி அனுமதி காலத்தினை

மேலும் ஒரு வருடம் நீட்டிப்பு செய்து வழங்க வேண்டி விண்ணப்பம் செய்துள்ளது.

அதனடிப்படையில் ஒப்படைக்கும் தேதியிலிருந்து 1 வருட காலத்திற்கு அல்லது LED விளக்குகளாக மாற்றியமைக்கும் வரை நகராட்சிப் பகுதியில் உள்ள 1281 எண்ணம் தெரு விளக்குகள் மற்றும் 74 எண்ணம் டைமர் ஸ்விட்சுக்கள் ஆகியவற்றிக்கான இயக்குதலும் பேணுதலும் பணியினை அதே விலை விகிதத்தில் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.14.75 இலட்சத்திற்கு ஆண்டிப்பட்டி M/s சடையாண்டி ஏஜென்ஸீஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **மேற்படி ஆண்டிப்பட்டி M/s சடையாண்டி ஏஜென்ஸீஸ் நிறுவனம் இயக்குதலும் பேணுதலும் பணியினை மேற்கொண்ட காலத்தில் பொது மக்களிடமிருந்து வரும் புகார்கள் குறைந்துள்ளதாலும், புகார்கள் குறித்து மேற்படி நிறுவனம் உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுப்பதாலும் நகர்வாழ் பொது மக்களின் நலன் கருதி ஒப்படைக்கும் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு அல்லது LED விளக்குகளாக மாற்றியமைக்கும் வரை இதில் எது முதலில் நிகழ்கிறதோ அது வரை மேற்படி நிறுவனம் மூலம் பராமரிப்புப் பணி மேற்கொள்ள உரிய அனுமதி வழங்க வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.4834/2019/இ1).**

**தீர்மான எண், நாள்** **786, நாள்.31.12.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

பொருள் எண்.20

இந்நகராட்சி அலுவலகத்தில் பணியாளர்கள் பயன்படுத்தி வரும் கழிப்பறைகளை சரி செய்யும் பணி, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் நிறுத்துவதற்கு மேற்கூரை அமைக்கும் பணி, துப்புரவு ஆய்வாளர் அறைக்கு அலுமினியம் தடுப்பு அறை அமைக்கும் பணி, மேலாளர் அறை கதவு சரி செய்யும் பணி, தேர்தல் பிரிவிற்கு 2 எண்ணம் பீரோ மற்றும் பொறியாளர், மேலாளர், கணக்கர் ஆகியோர்களுக்கு புதியதாக மேஜை, நாற்காலி வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

1. **பணியாளர்களின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4831/2019/இ1).**

**தீர்மான எண், நாள்** **787, நாள்.31.12.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

பொருள் எண்.21

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள பழைய ஜெராக்ஸ் மிஷினினை எடுத்துக் கொண்டு புதியதாக ஜெராக்ஸ் மிஷீன் ஒரு எண்ணம் வாங்க 26.12.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. M/s Shaz Copier Technique, Madurai rate Quoted for Rs.99710/-

(Including GST)

2. M/s Reva tech Coppier Care, Madurai rate Quoted for Rs.101450/- (Including GST)

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s Shaz Copier Technique, Madurai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4240/2019/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **788, நாள்.31.12.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******